ஶ்ரீமதே இராமாநுஜாய நம:

# 5. திருவேங்கட ராமானுஜ ஸ்வாமி

## தனியன்

ஶ்ரீமத்வ்யோம மஹாஶைல ராமாநுஜமுநிப்ரியம் |
ராமாநுஜமுநிம் வந்தே$_3$ ஜ்ஞாநாதி$_3$ கு$_3$ணஸாக$_3$ரம் ||

## வாழி திருநாமம்

சீராரும் செம்பதுமத் திருத்தாள்கள் வாழியே
சிறந்த திருச்சேலை அமர் திருவரையும் வாழியே
ஏராரும் திருமார்பும் புரிநூலும் வாழியே
இலங்கிய முக்கோல் கரம் இருதோளும் வாழியே
பாராரும் தமிழ் மறையைப் பகர் பவளம் வாழியே
பைம்பொன் முடி பல்லாண்டு பல்லாண்டு வாழியே
ஆராமம் சூழ் மங்கைக்கனைத்தழகும் கண்ட
முனி ஆதரவால் அருள் முனிவன் அனைத்தூழி வாழியே

அன்னவயல் குந்தி நகர் அவதரித்தோன் வாழியே
அருள் திருவாய்மொழிப் பிள்ளை அடி பணிவோன் வாழியே
பன்னு கலை வேதாந்தம் பயின்றிடுவோன் வாழியே
பதின்மர் கலைப் பொருள் அனைத்தும் பரிந்துரைப்போன் வாழியே
மன்னு புகழ் வரமங்கை வந்துதித்தோன் வாழியே
வானமாமலை முனி தாள் மனத்து வைப்போன் வாழியே
என்னை இந்தப் பவத்தினின்றும் எடுத்தளிப்போன் வாழியே
எங்கள் இராமானுச முனி இனிதூழி வாழியே

## சீர்

வாழி வரமங்கை மாமுனிவன் மாமலர்த் தாள்
வாழியவன் கருணை வாழ் விழிகள் - வாழி
திருவாய்மொழிப் பிள்ளை சீரருளால் மாறன்
திருவாய்மொழி உரைக்கும் சீர்